13.02.2026

O.S.No. 138/2019

DW1– பூங்கனி – க/பெ. கோட்டைத்துரை

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. பிராது தபசில் சொத்து ஆதியில் புஞ்சை நிலமாக இருந்தது என்றால் மழைக்காலத்தில் விவசாயம் செய்வார்கள். வழக்கு தபசில் சொத்தில் ஒரு கிணறு இருந்தது, எனதுகணவர், எனது சகோதரிகளின் கணவர்கள் சேர்ந்து கிணறை துார்ந்துவிட்டனார்கள் என்றால் சரியல்ல, கிணறே இல்லை. நீதிமன்ற ஆணையர் மூலம் ஸ்தல பார்வை செய்தால் கிணறு இருந்தது துலங்கும் என்றால் சரியல்ல. ஆணையர் அமைப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.689/1ல் கட்டிடம் எதுவும் இருந்தது இல்லை என்றால் சரிதான். அது வானம் பார்த்தபூமி என்றால் சரிதான்.

2. எனது தந்தை, அவரது சகோதரர்கள் சேர்ந்து 09.03.2006ம் தேதியில் பொதுப்பாதை ஒப்பந்தம் பிறப்பித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.9 ஆவணத்தில் வாதியோ, வாதியின் தகப்பனாரோ தரப்பினர் கிடையாது என்றால் சரிதான்.

3. புல எண்.689/1ஏ2, 689/1சி2 ஆகியவற்றிற்கு எனக்கு உரிமை உண்டா என்றால் உண்டு. மேற்படி சொத்து எங்களுக்கு பூர்வீக சொத்தாகும், அந்த சொத்துக்கு பட்டா எண் தெரியாது. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பட்டாக்களின் அடிப்படையில்தான் மேற்படி

சொத்துக்கு உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை பொறுத்து நாங்கள் எந்த ஒரு பட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனவே அந்த சொத்தினை பொறுத்து எந்த உரிமைப்பாடும் கிடையாது என்றாலும் சரியல்ல. மேற்படி சொத்துக்களை பொறுத்தும் எழுதிக்கொண்ட வா.சா.ஆ.9 ஒப்பந்த ஆவணமானது அச்சொத்தினை கட்டுப்படுத்தாது என்றும், வாதிக்கு எதிராக செல்லாது என்றால் சரியல்ல.

4. பிராது சொத்தில் இருந்து வந்த கிணற்றை நாங்கள் மூடிவிட்டதால் வாதியின் பயன்பாட்டிற்கு மீளதோண்டி கொடுக்க கடமைப்பட்டவன் என்றும், எனது தகப்பனார், அவரது சகோதரர்கள் பிறப்பித்துக்கொண்ட பொதுபாதை ஒப்பந்தம் இவ்வழக்கு வாதியையும், அவருக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்துக்களையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியுள்ள வழக்கு தீர்வாகத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி